

# விசிறி சாமியார்

பாலகுமாரன்

# விசிறி சாமியார்

குழம்பி குழம்பி அயர்ச்சி வந்தது.

அயர்ச்சியில் அலுப்பு வந்தது.

அலுப்பு எரிச்சல் மூட்டியது. நாளாக நாளாக எரிச்சல் உறவுகள் மீது சீறி விழ செய்தது.உறவு தன்மையை முற்றிலும் கெடுத்தது.

வத்சலா வெடுக் வெடுக் என்று பேசினாள், பதிலுக்கு அவளை குத்தி காட்ட வேண்டும் என்று தோன்றியது.

பாரதிக்கு துக்கம். உங்களுக்கு என்ன துக்கம்?

உங்கப்பனை நினைச்சுண்டேன், துக்கம் போதுமா?

பதிலுக்குப் பதில். கேலிக்கு கேலி. குத்தலுக்கு குத்தல்.

திருவண்ணாமலை இல்லை.இமயமலைக்கே போனாலும் உங்க புத்தி மாறாது. நாய் வாலை நிமிர்த்த முடியாது.

ஆமா நாய் தான். ஒரு நூறு ரூபாய் கொடு?

எதுக்கு?

ரேஸுக்கு போறேன். இன்னிலேர்ந்து. ஒழுங்கா குடித்தனம் பண்ற என்னை நாய்ங்கற ரேஸ்க்கு போற உங்கப்பாவை தலையில வச்சுக்குற. நான் நாயவே இருக்குறேன். காசு எடு. எழுவத்தஞ்சாயிரம் விழாதா.... நீ தரியா இல்லை நானே எடுத்துக்கட்டா?

பணப்பெட்டியை லொட்டென்று வைத்துவிட்டு சமயலறையில் உட்கார்ந்து வத்சலா அழுதாள்.

சீனு சந்தோசம் கலந்த வேதனையை உணர்த்தான். பணப்பெட்டியை உள்ளே வைத்துவிட்டு படுத்துக் கொண்டான்.

வாழ்க்கை எப்போதும் சண்டை சச்சரவாகவே ஆகிவிட்டது. முன்னை காட்டிலும் எல்லோரிடமும் இனிமையாய் இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டாலும் எல்லா விஷயங்களும் அதற்க்கு நேர்மாறாக நடந்தன.

திருவண்ணாமலை அவனை மாற்றவில்லை.

யோகி அவனை மாற்றவில்லை.

தப்பு தப்பு அவன்தான் மாறவில்லை. அவன் நாய்வால் அது நிமிர்ந்து. நிமிர்த்த முடியாது.

மனசு அழுதது. ஏன் இப்படி மனசு அலைபாய்கிறது. என்கிற பிராத்தனை வந்தது. என் தகப்பனார் உன்னை வழிநடத்துவார் என்று சொன்னாயே. என் வழி மாறவில்லையே சுவாமி. துக்கம் வந்தது.

மாறுதல் கண்ணுக்கு தெரியாமல் நடைபெறும் என்பது சீனுவுக்கு புரியவில்லை. அவனுள் பொங்கும் இந்த துக்கமே துக்க விசாரமே மாறுதலின் முதற்படி என்பது புரியவில்லை.

மறுநாள் ஆபீஸுக்கு வத்சலா போன் செய்தாள்.

என்ன வத்சலா?

ஒரு வார பத்திரிகையிலிருந்து லெட்டர் வந்திருக்கு உடனே வந்து பாக்கணுமாம். இன்னி தேதி போட்டு நாலு மணி போட்டு டைம் தந்திருக்கு. வேறெதுவும் எழுதலை.

சரி நான் போறேன். இப்பவே போறேன்..................